Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 கர்த்தாவே, துன்மார்க்கனுடைய ஆசைகள் சித்தியாதபடி செய்யும்; சங்.140:8 டிசம்பர் 2018 No.11

ஜெபமும் வரப்போகிற ராஜ்யமும்

Prayer and the coming kingdom

Dave Bults

தேவன் தமது சபையை ஜெபிக்கும்படி அழைக்கிறார். இந்த அழைப்பு அவருடைய குமாரனது வருகைக்கு ஆயத்தப்படுவதற்கு ஏதுவானது. உண்மையாகச் சொன்னால் இது 'கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்' என்ற யோவான் ஸ்நாபகனின் அழைப்புக்கு ஒப்பாயிருக்கிறது.

பெரும்பாலும் மனிதரிடம் கிரியை செய்ய தேவன் ஜெபத்தையே எதிர்பார்க்கிறார். தேவன் ஒரு பணியை செய்ய ஆயத்தப்படும்போது அவர் தமது ஜனத்தை ஜெபிக்கும்படி எழுப்புகிறார். இதுவே அவர் தமது ஒரே பேறான குமாரனை 2000 வருடங்களுக்கு முன் பாக இவ்வுலகிற்கு அனுப்பியபோது நடந்தது. அன்னாள் சிமியோன் ஆகிய இரு வயது முதிர்ந்தவர்கள் மேசியாவின் வருகைக்காக பாரத்தோடு விண்ணப்பம் பண்ணினார்கள். அவர் இன்றும் அவ் விதமாகவே செய்து கொண்டிருக்கிறார் என்பதை எல்லாவிதத்திலும் நம்பலாம்.

இப்படியிருக்க இன்று சபை ஒரு ஜெபிக்கும் சபையாக இருப்பதைவிட முக்கியமானது எதுவுமில்லை. அது ஜெபிக்கும் பங்கை நிறைவேற்ற அடியெடுத்து வைக்க வேண்டும். ஜெபம் ஒரு பக்க செயலாக மட்டும் இருக்க லாகாது. தேவன் இன்று உலகில் செய்ய விரும்பும் அவரது இருதய விருப்ப மாகும். ஆவியால் நடத்தப்படும் ஜெபம் மூன்று கருத்துக்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

எழுப்புதலின் ஜெபம்

தேவன் தமது பிள்ளைகள் விழித்தெழும்பும்படி அழைக்கிறார். 'ஆதலால் தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு' எபே.5:14. எழுப்புதல் என்பது தூங்குகிற சபை எழுந்து கிறிஸ்துவின் பிரசன்னத்தை புத்தம் புதியதாக புதுமையான விதத்தில் அனுபவிக்க ஆரம்பிக்கும் காலமாகும். எழுப்புதலைக் குறித்து அறிந்த யாவரும் விழிப்புணர்வுக்கு முன்னால் தேவன் தமது ஜனங்களை ஜெபிக்கச் செய்கிறார் என்பதை அறிவார்கள்.

பல ஆண்டுகளாக ஐக்கிய நாடுகளிலும் வேறு பல நாடுகளிலும் எழுப்புதலை எதிர்பார்த்தவர்கள் ஜெபத் தின் மூலமாகவே அஸ்திபாரமிட்டனர். அவ்வாறான இயக்கம் பெருக்கமடைந்து விசுவாசிகள் தேசத்திற்கும், உலகத் திற்கும் எழுப்புதல் ஏற்பட தேவன் ஒருவரே காரணமானவர் என்பதை அறிந்து கொண்டனர். நமது நாட்களில் எழுப்புதல் ஏற்பட அதிகமாக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட ஊழியங்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. சார்லஸ் ஸ்பர்ஜனைப் போல "மனிதரே, சகோதரரே தேவன் நம் மத்தியில் தோன்றி முந்திய தலைமுறைகளில் ஏற்பட்டது போன்ற அற்புதமான காரியங்களை நிகழ்த்த உங்களின் சிலர் எழும்பினால் நலமாயிருக்கும். நீங்கள் வீடு சென்று எழுப்புதலுக்காக ஜெபிக்க வேண்டும். உங்கள் விசுவாசம், பெரிதாகவும், அன்பு பற்றியெரிவதாகவும், இந்த நிமிடத்தி லிருந்தே நீங்கள் இடைவிடாமல் ஜெபிக்கவும் ஆரம்பிக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை தேவன் எழுப்பு வாரானால் என் மனம் சந்தோஷப்படும்" என்று நாமும் கூறவேண்டும்.

தேவனிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ள விரும்பும் நீண்ட பட்டியலின் ஒரு பகுதியாக எழுப்புதலும் இருக்கக் கூடாது. அதில் ஆண்டவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, மனந்திரும்புதல் அடங்கியிருக்க வேண்டும். சபையிலும், சமுதாயத்திலும் காணப் படும் துக்கமான நிலையை உணர்ந்து பங்களிப்பை அளிப்பதற்காக ஏறெடுக்கும் ஜெபம் இது. தேவனுடைய தலையீடு ஒன்றே இதற்கு நிவாரணம் என்ற நம்பிக்கை யுடன் செய்யப்படும் ஜெபம் இது. எழுப்புதலுக்கான ஜெபம் தூய ஆவியானவர் மறுரூபப்படுத்தும் வல்லமை இறங்கிவர ஆயத்தம் செய்கிறது.

எழுப்புதலுக்கான ஜெபத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க அதிக அளவான விசுவாசம் வேண்டும். இது மூன்று வார ஜெபத்தின் மூலம் உலகத்தை மாற்றியமைக்கும் மூன்று படிகளைக் கொண்ட ஒரு திட்டமல்ல. இது பெரிய எழுப்புதலைக் கொண்டுவருமட்டும் அல்லது மரணமட்டும் செய்யும் ஒரு முயற்சி. ஜான் நாக்ஸ் என்பவர், 'ஆண்டவரே ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும், இல்லையெனில் நான் சாகட்டும்' என்று ஜெபித்தார். விசுவாசத்தோடு ஏறெடுக்கும் இந்த முயற்சி நம்மைச் சுற்றிலும் நடைபெறுபவைகளைக் குறித்து அக்கரை கொள்வதில்லை. ஆபகூக் மூலம், சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல, பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்' ஆப.2:14 என்ற தீர்க்கனின் வாக்கு நிறைவேறு மட்டும் அர்ப்பணத்தோடு ஏறெடுக்கப் படும் ஜெபமாகும்.

சுவிசேஷப் பணியின் ஜெபம்

இரண்டாவது பகுதி கடைசி கால சபையில் ஏறெடுக்கப்படுவது சுவிசேஷப்பணியின் ஜெபமாகும். இயேசுக் கிறிஸ்து விரைவில் வருகிறார் என்பதற்கான மிகத் தெளிவான சுவிசேஷம் எங்கும் அறிவிக்கப் படுவதாகும் மத்.24:14 வாசிக்க.

மார்ட்டின் லாயிடு ஜோன்ஸ் "நாம் எழுப்புதலுக்காக ஜெபிக்கும் முக் கிய காரணம் என்னவெனில் நாம் தேவ னது நாமத்தை நிலைநிறுத்துவதும் அவ ரது மகிமையை வெளிப்படுத்துவதுமா கும். அதின் மூலம் சம்பவிப்பவைகள் தேசங் களையும், மக்களையும் நின்று யோசிக்கச் செய்யும் என்ற ஆவல் நமக்கு வேண்டும்."

நமது நாட்களில் எங்கு சபைகள் அதிகமாக ஜெபிக்கின்றனவோ அங்கு அதிக வளர்ச்சியும் காணப்படுகிறது. ஜெபம் சுவிசேஷப் பணியை ஆச்சரிய மான விதத்தில் வளர்ச்சியுறச் செய்கிறது. உலக ஜெபக் கூடுகைக்காக சில ஆண்டு களுக்கு முன் நானும் எனது மனைவியும் இந்தோனேஷியா செல்லும் வாய்ப் பினைக் பெற்றோம். ஒரு கிறிஸ்தவ ஜெபக் கூடுகைக்கு அது ஒரு அன்னிய மான இடமாகத் தோன்றியது. எல்லா நாடுகளைவிடவும் இந்தோனேஷி யாவில் அதிகமான முகமதியர் வாழுகின்ற னர். ஆனால் நூற்றுக்கணக்கானோர் அந்த சபையில் இரவும் பகலும் ஜெபித்துக் கொண்டேயிருப்பதால் அது துரிதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அவர்களது அசாதாரண ஜெபக்கூடுகை கள் தேவன் அவர்கள் ஜெபங்களுக்குப் பதிலளிக்க ஏதுவாயிருக்கிறது.

தேவன் அறுவடைக்காக வேலை யாட்களை அனுப்பும்படி ஜெபிக்க சபையை அழைக்கிறார். மத்.13:39-ல் இயேசு, 'அறுப்பு உலகத்தின் முடிவு' என்று கூறினார். ஆண்டவர், கிடைக்கும் அனைத்து வழிகளையும் அவரிடத்தில் அழைக்கப்பட்டவர்களை கொண்டுவர பயன்படுத்துகிறார். நமது பணி ஜெபிப் பதும் பகிர்ந்து கொள்ளுவதுமாகும். அதன்மூலம் கர்த்தருடைய சரீரம் கிறிஸ்துவின் செய்திக்கு பதிலளிக்கும் ஒவ்வொருவரையும் அடங்கச் செய்யும்.

(3-ம் பக்கம் பார்க்க)

ஜனவரி மாத உபவாச ஜெபம்

Heart cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக இதய கதறல் 2019

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : ***05.01.2019***
1-வது சனிக்கிழமை

சமயம் : *காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை*

இடம் : **C.S.I. கிறிஸ்து சபை**
தெற்கு தாமரைக்குளம், குமரி மாவட்டம்

தொடர்பு : **Rev.T. Samuel**
மொபைல் : 94874 32198

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : **வருகையின் தூதன்,** நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, **mail:**Varukayinthoothan@hotmail.com
வங்கிகணக்கு : VARUKAYIN THOOTHAN, A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

இம்மாத சொன்னான சிந்தனை

தன்னை பூரணமாய் ஒப்புக்கொடுத்த ஒரு மனிதனைக் (மனுஷியை) கொண்டு தேவன் எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்யமுடியும் என்பதை உலகம் இன்னமும் காணவில்லை.

வாக்குத்தத்தம்

"அவருக்கு பயந்தவர்களுக்குக் குறைவில்லை..... கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" சங். 34:9,10

கீழ்ஸ்துவுக்குள் மீகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

காவிரி டெல்டாவின் வாழ்வாதாரத்தை வாரி சுருட்டிய புயலுக்கு "**கஜாபுயல்**" என்று பெயரிட்டிருக்கிறார்களே அது போல நமது ராணுவம் ஏதாவது தாக்குதல் நடத்தவும் ஒரு பெயரிடுவார்கள். இந்தியாவுக்குள் கடல்வழியாக தீவிரவாதிகள் ஊடுருவலை தடுக்க இந்திய கடலோர காவல்படை "**சஜாக் ஆப்ரேஷன்**" ஒத்திகை நிகழ்ச்சியை அடிக்கடி நடத்தி வருகிறது. அதுபோல அடியேனும் ஒரு '**ஆப்ரேஷன்**' தாக்குதல் நடத்தப்போகிறேன்.

I am writting this Editorial to the Children of God, not to Christians by name. I am concentrating the born again Christians and not born Christians. I am not thinging about the Christian Community but the real Christians those who are following JESUS as His disciples.

இந்த ஆசிரியர் கடிதத்தை அடியேன் பேர் கிறிஸ்தவர்களுக்கு அல்ல, தேவனுடைய பிள்ளைகளுக்கே எழுதுகிறேன். கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவர்களையல்ல மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களை மையப்படுத்தி எழுதுகிறேன். கிறிஸ்தவ சமுதாயத்தையல்ல, இயேசு கிறிஸ்துவை பின்பற்ற தீர்மானித்த சீஷர்களாகிய கிறிஸ்தவர்களை நினைத்து எழுதுகிறேன். ".... முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" அப்.11:26.

முதலாவது தூதன் வாசகரிடம் ஒரு கேள்வி. அதற்கான பதிலை நீங்கள் இந்த பத்திரிகையின் பேப்பரில் பேனாவால் எழுத வேண்டுமென்று மிகவும் பட்சமாய் கேட்கிறேன்.

கேள்வி : நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருப்பதின் நோக்கம் என்ன?

உங்கள் பதில் :

உங்கள் சகோதரனாகிய நான் தேவனுடைய பிள்ளையாய் ஜீவிப்பதின் ஒரே நோக்கம் தேவனுடைய ராஜ்யம் செல்வதே! தேவனுடைய ராஜ்யம் போக வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் உண்டு, அது "**பிதாவின் சித்தம்**" செய்வதே!

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை மத்.7:21.

நீங்கள் "தேவனுடைய சித்தம்" செய்கிறீர்களா? தமிழ்நாட்டில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை அனேக ஊழியர்கள் (அல்லது அவர்கள் மனைவிமார்) இந்த பத்திரிகையை படிக்கிறீர்கள் என்று அறிவேன். "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! **உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?** என்பார்கள்.

அப்பொழுது, **நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்** என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" மத்.7:22,23.

அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து : வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்..... என்பார் மத்.25:34.

அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் : சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்பார்" மத்.25:43.

அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார். மத்.25:46.

எது தேவனுடைய சித்தம்? ஒரு மிஷனெரி பத்திரிகையில் படித்ததைக் கீழே எழுதுகிறேன்:

நமது இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் நிறைவடைந்துள்ளது. 3 பேரோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் இன்று 250 முழு நேர பணியாளர்களோடு, ஐந்து மாநிலங்களில் நற்செய்திப்பணி செய்து வருகிறது. ஆரம்பத்தில் நம்மோடு இருந்த நமது அருட்பணியாளர்கள் தற்போது ஓய்வுபெற ஆரம்பித்துவிட்டார்கள். இதுவரையிலும் இந்த காரியமாக எந்தவிதமான நிதியும் ஒதுக்காத காரணத்தால், தற்போது இது மிகப்பெரிய பாரமாக உள்ளது. இதற்கான நிதி அவசரமாக திரட்டப்பட வேண்டியுள்ளது. தேவனையும், இயக்கத்தையும் மட்டுமே நம்பி அரும்பணியாற்றிய அருட்பணியாளர்களின் ஓய்வுநாட் கள் பயனுள்ளவையாக அமைய அவர்களின் சேவையை கனப்படுத்திக் கௌரவிக்க வேண்டியது நமது கடமையாகும். ஆகவே தேவன் மீது அன்பு கொண்ட தாங்கள் இந்த நிதிக்காக உங்கள் கரங்களை தாராளமாக திறந்து அருட்பணியாளர்களை கௌரவிக்க அன்புடன் வேண்டுகிறோம். இந்த நிதிக்கான தேவை ஐம்பது இலட்சமாகும்.

மேலே காணும் செய்தியை வாசித்தபோது எனக்கு சிறிய 'வலி' உண்டானது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மிகப்பெரிய கட்டளை (Great Commendment) "பின்பு, அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்" மாற்கு 16:15,16.

தேவனுடைய மகிமையான ஊழியத்தைச் செய்யும் மிஷனெரிகளுக்கு மாத உதவி ரூ.3500/- (சில ஸ்தாபனங்களில் ரூ.5000/-) தேவனுடைய பிள்ளைகள் பட்டாசுகள்/ பலகாரங்கள்/ பட்டாடைகள்/ பட்டொளிக்கென்று (Decoration) செலவுசெய்யாமல் தேவனுடைய ஊழியத்திற் கென்று (மிஷனெரி பணிக்கு) கொடுங்கள்.

பிப்ரவரி மாதம் கோயம்பத்தூர் சிட்டி A.G. சபையில் நடந்த உபவாச ஜெபத்திற்கு அருமையான தூதன் வாசகி ஒருவர் தன்னோடு வேறு இரண்டு சகோதரிகளை அழைத்து வந்திருந்தார்கள். அவர்கள் ஏழைகளும், சிலர் விதவைகளும், இந்துக்களாயிருந்து ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டவர்களுமாவர்.

ஏழ்மையான இந்த சூழ்நிலையிலும் மூன்று

(5-ம் பக்கம் பார்க்க)

உபவாச ஜெபம்

WESLEY DEVADASON
A/c. No.: 370601000002557
I.O.B., Court Road,
Nagercoil-1
IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி

WESLEY DEVADASON
A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road,
Nagercoil-1
IFSC Code : SYNB0006182

(1-ம் பக்க தொடர்ச்சி)

ஆன்ட்ரூ முர்ரே, "கிறிஸ்தவ சபை ஜெபிக்கும்படி தூண்டும் ஒருவன் உலக சுவிசேஷப் பணிக்கு சரித்திர அளவில் மிகப்பெரிய பங்களிப்பை அளிக்கிறார்" என்று ஒருமுறை கூறியிருக்கிறார்.

ஜாமக்கார ஜெபம்

ஜெபத்தின் மூன்றாவது பகுதி ஜாமக்கார பகுதியாகும். பழைய ஏற்பாட்டின் கலாச்சாரத்தின்படி சமுதாயங்களைச் சுற்றிலும் ஜாமக்காரர் பாதுகாவலுக்காகவும், ஆபத்தைக் குறித்து எச்சரிப்பதற்காகவும் நியமிக்கப்பட்டனர். ஏசாயா 62:6-7 வசனங்களில் தேவன் ஜெபத்தையும் ஜாமக்காரனின் கருத்தையும் இணைத்து ஜெபத்தின் ஒரு முறையாகக் காண்பிக்கிறார் (வாசிக்க)

ஜெபிக்கும் சபையின் மிகப் பெரிய தேவை இன்று தங்கள் சமுதாயத்தின் மதில்களில் அல்லது தேசத்தின் மதில்களில் நின்று விழிப்போடு ஜெபிப்பவர்களுக்காக ஜெபிப்பதாகும். ஜாமக்காரன் உலகத்தைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை உற்று கவனிக்கிறான். அதே வேளையில் ஆவியில் என்ன நடைபெறுகிறது என்பதையும் கவனமாகப் பார்க்கிறான். அவன் தேவனுடைய சித்தமும் நோக்கங்களும் செயல்பட அவரிடம் கேட்கிறான். அவன் எக்காளம் ஊதி எச்சரிப்பதால் இக்கட்டான நிலைகளில் ஜெபிக்கும் கிறிஸ்தவர்கள் தூண்டப்படுவார்கள்.

ஜாமக்காரன் ஒருபோதும் அமைதலாயிராமல் இரவும் பகலும் ஜெபிப்பது அவனது ஒரு குணாதிசயம். இப்பண்பு ஒரு ஜாமக்காரன் எப்படி உக்கிராணத்துவம் உடையவனாயிருக்க வேண்டுமென்பதைக் காண்பிக்கிறது.

கடந்த காலங்களில் இயேசுக் கிறிஸ்து தமது ஜனங்களை இவ்வகையான வல்லமையான மன்றாட்டிற்கும் ஆராதனைக்கும் அழைத்திருக்கிறார். 1700-ம் ஆண்டுகளில் மொரேவியர்கள் இரவு பகல் ஜெபிப்பதற்கு முன்னுதாரணங்களாயிருந்தனர். அனேக ஜெபக் குழுக்களை ஏற்படுத்தினர். அவை இடைவிடாமல் 100 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்தன. அதன் மூலம் ஒரு வல்லமையான மிஷன் இயக்கம் உருவானது.

ஹட்சன் டெய்லர் என்ற மிஷனெறியும் இவ்வித ஊக்கமான ஜெபத்தைக் குறித்து அறிந்திருந்தார். "பெந்தெகோஸ்தே நாளைக்குப் பின்பு முழு சபை எப்போதாவது அனைத்துப் பணிகளையும் ஒதுக்கிவிட்டு, ஆவியானவரின் வல்லமை வெளிப்படும்படி 10 நாட்கள் காத்திருந்ததுண்டா? நாம் வழிமுறைகளுக்கும், எந்திரங்களுக்கும், ஆதாரங்களுக்கும் அதிக கவனம் செலுத்திவிட்டு வல்லமையின் உறைவிடத்தை நாடுவதில்லை" என்கிறார்.

நமது நாட்களிலும் இரவு பகல் ஜெபம் மறுபடியும் சபைகளில் ஆரம்பித்துவிட்டது. **தேவன் மறுபடியும் தமது பிள்ளைகளை அசாதாரணமான ஜெபத்திற்காக அழைக்கிறார்.** ஆண்டவராகிய இயேசு இவ்வாறு நம்மிடம் மறுபடியும் பேசுகிறார் : "..... நீங்கள் ஒரு மணிநேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?" மத்.26:40.

இதை வாசிக்கிற அனேகருக்கு இரவு பகல் ஜெபிப்பது வினோதமாகத் தோன்றலாம். நமது சூழ்நிலைகளையல்ல தேவன் நம்மிலும் நம் மூலமாகவும் செய்ய விரும்புகிறவைகளின் காட்சி நமக்கு வேண்டும். சகரியா 4:10-ன் படி அற்பமான ஆரம்பத்தின் நாளை தேவன் அசட்டை பண்ணுவதில்லை. விசுவாசத்தை விட்டுவிட வேண்டாம். அதை பெருக்குங்கள் இதுவே எனது சவால்.

நாம் இரவு பகலாக ஜெபித்தாலும், எழுப்புதலுக்காகவும் உலக சுவிசேஷ பணிக்காகவும் ஜெபித்தாலும் அது இயேசு கற்பித்தபடி அவருடைய ராஜ்யம் வரவும், அவருடைய சித்தம் செய்யப்படவுமேயிருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு குறிப்பிட்ட அரசு இவ்வுலகிற்குரியதல்ல, ஆனால் உலகத்திற்கு எந்த அரசும் இதுவரையிலும் ஏற்படுத்தாத தாக்கத்தை அல்லது இன்னும் ஏற்படுத்தக்கூடாத தாக்கத்தை ஏற்படுத்தும். ஜெபிக்கும் ஒரு சபை கிறிஸ்துவின் ராஜ்யம் வர ஏதுவாயிருக்கிறது.

கடைசிமட்டும் நிலைத்திருக்கக் கிருபை

Grace to endure to the End

D.L.Moody (1837-1899)

"இவ்விதமாய் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் நமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று, நிலைகொண்டிருந்து தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்" ரோமர் 5:1-2.

சமாதானம், கிருபை, மகிமை என்ற மூன்று விலையேறப்பெற்ற பதங்கள் மேற்கூறிய வசனங்களில் காணப்படுகின்றன. நாம் கல்வாரியை திரும்பிப் பார்க்கும்போது தேவகுமாரன் இரத்தம் சிந்தி நமது பாவங்களுக்காக மரித்து நமது குற்றமுள்ள மனச்சாட்சிக்கு சமாதானத்தை தருகிறதை விசுவாசத்தினால் காண்கிறோம். பின்பு தற்காலத்திற்குரிய அனுதின கிருபையையும் பெறுகிறோம். பின்பு நித்தியத்தில் நாம் பெற விருக்கும் மகிமையையும் காண்கிறோம்.

ஆக கடந்த காலத்திற்குரிய சமாதானம் நிகழ்காலத்திற்குரிய கிருபை, எதிர்காலத்திற்குரிய மகிமை ஆகியவை விலையேறப்பெற்றவை. நமது ராஜாவை இவ்வுலகைக் கடந்து சென்ற பின்பு அவருடைய மகிமையில் தரிசிப்போம்.

அனேகர் கல்வாரியின் முடிவுற்ற செயலால் திருப்தியுடனிருக்கின்றனர். வரப்போகிற மகிமையை அவர்கள் மறந்துவிடுகின்றனர். அம்மட்டும் நம்மை நிலைநிறுத்த கிருபை நம்முடனிருக்கிறது. இந்த மகிமையான சத்தியத்தை உங்கள் இருதயத்தில் நீங்கள் வைத்திருந்தால் தேவனைக் குறித்த சந்தேகம் வருவதில்லை. அவர் உங்களைப் பாதுகாக்க முடியாது என்ற எண்ணம் வருவதில்லை. அவரிடம் திரளான வல்லமையும், கிருபையுமுண்டு. எனவே இவ்வுலகிலுள்ள நம் அனைவரையும் அவர் பாதுகாக்க முடியும்.

கிருபாசனத்தண்டை கிட்டிச் சேர்ந்து கிருபையைப் பெற்றுக் கொள்ளுங்கள். இதனைப் பெற்றுக்கொள்ள முடியாத எவருமே இல்லை. கிருபையை எவ்வளவு வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். அது வற்றிப்போகாத ஊற்று.

கடந்த கால இழப்புகளையே எண்ணிக் கொண்டிருக்கும் பல கிறிஸ்தவர்களுண்டு. கடந்த காலத்தை துக்கத்தோடு பார்க்கிறார்கள். எதிர் காலத்தை சோதனைகளும் துன்பங்களும் நிறைந்ததாகப் பார்க்கிறார்கள். இவை எல்லாவற்றையும் தோளில் சுமக்கிறார்கள். அவைகளை அவர்களால் சுமக்க முடியாது. அவர்கள் தேவபணியையும் செய்ய முடியாது.

தங்கள் மரண நாளை எண்ணி பயப்படுகிறவர்களுண்டு. அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாயிருந்தால் கிருபை அவர்களுக்கு அளிக்கப்படும். "உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் உன் வலது கையைப் பிடித்து : பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்" ஏசா.41:13.

தேவனுடைய வல்லமையின் கிருபையை நாம் மட்டுப்படுத்தக் கூடாது. "மேலும் நீங்கள் எல்லாவற்றிலும், எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும், பெருகுகிறவர்களாயுமிருக்கும் படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்" 2.கொரி.9:8. நாம் அனைவரும் சேவையிலீடுபடும்படி நம்மைத் தரிப்பிக்கும் கிருபை அவரிடத்திலுண்டு. நாம் அவரிடத்தில் வராதபடியால் இந்தக் கிருபையை நாம் பெற்றுக் கொள்வதில்லை.

"அன்றியும் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது" 11 கொரி.12:7. அனேகர் இவ்விதமாக முள் தங்கள் மாம்சத்திலிருந்து நீக்கப்படும்படி ஜெபிக்கிறார்கள். ஆனால் அது ஒரு நோக்கத்துடன் வைக்கப்பட்டிருக்கிறது. "நம்மை நாம் உயர்த்தாதபடி".

தங்கள் வாழ்வில் பெற்ற வளமையை விட தாங்கள் அனுபவித்த பாடுகளுக்காக நியாயத்தீர்ப்பு நாளில் அனேகர் தேவனைத் துதிப்பார்கள். பவுல் தான் பட்ட அடிகளுக்காக அதிகமாக தேவனைத் துதித்தார். தேவனிடத்தில் அதிகக் கிருபையைப் பெற வாஞ்சிக்கும் நாம் மாம்சத்தில் கொடுக்கப்படும் முள்ளையும் சகிக்க வேண்டும். நாம் தனியாக யுத்தத்தில் போராட தேவன் அனுமதிப்பதில்லை. அவர் அனைத்து கஷ்டங்களையும் மேற்கொள்ள கிருபையளிப்பவர். அவரது கிருபை இலவசமாக நமக்கு அளிக்கப்படுகிறது நாம் விரும்பினால் பெற்றுக்கொள்ளலாம்.

கண்பார்வையற்ற சாங் : மஞ்சூரியாவின் இரத்தசாட்சி

Blind Chang : Martyr of Manchuria - Part 3 *(பகுதி 3)*

Rosalind Goforth

1899-ம் ஆண்டில் 'I H0 Chwan' என்று தங்களை அழைத்த "நீதியுள்ள ஐக்கிய போராளிகள்" என்று பொருள் பட்ட ஒரு கூட்டத்தினர் சீனாவில் காணப்பட்டனர். அயல்நாட்டார் அவர்களை "பாக்ஸர்கள்" என்று அழைத்தனர்.இவர்கள் அயல்நாட்டாரின் விரோதிகள். இந்தப் பகைமை கிறிஸ்தவர்கள் மீது காண்பிக்கப்பட்டது. ஏனெனில் இவர்கள் அயல்நாட்டாரைப் பின்பற்றுகிறவர்கள் என கணிக்கப்பட்டனர். இந்தக் குழுவை சேர்ந்தவர்களின் பயிற்சி அனைத்து அயல்நாட்டாரையும் கிறிஸ்தவர்களையும் அகற்றும் ஒரே நோக்கத்தோடிருந்தது. இவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் வேகமாக வளர்ந்தது.

மேய் மாத ஆரம்பத்தில் இவர் களின் அதிரடி தாக்குதலால் மிஷனெறி களும், கிறிஸ்தவ சீனர்களும் கொல்லப் பட்டனர்.

இந்த சூழ்நிலையில் பார்வை யற்ற சாங் டிஷென்கோவ் என்ற பள்ளத்தாக்கில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை சந்திக்கும்படி சென்றார். அவரை அடை யாளம் கண்டுகொள்வது எளிது என்று அறிந்த ஒரு கிறிஸ்தவர் ஒரு மலைக்கு அவரை அழைத்துச் சென்று பத்திரமான ஒரு இடத்தில் தங்க வைத்தார்.

பல மைல் தூரத்திற்கு அப்பால் சாயோயாங்ஷான் என்ற இடத்தில் சாங் ஒரு சபையை ஸ்தாபித்திருந்தார். அங்கு பாக்ஸர்கள் சென்று 50 கிறிஸ்தவர் களைப் பிடித்து பயமுறுத்தினர். அவர் களைக் கொல்லுவதற்கான ஆயத்தங்கள் நடந்தன. அப்போது ஒருவன் "இவர்கள் அனைவரையும் கொல்லுவது முட்டாள் செயல். சாங் உயிரோடிருக்கும் வரை ஒரு கிறிஸ்தவனைக் கொன்றால் 10 கிறிஸ்தவர்கள் எழும்பிவிடுவார்கள். எனவே அவனைக் கொன்றுவிட்டால் இந்த இனத்தையே அழித்துவிடலாம்" என்று ஆலோசனை கூறினான்.

எனவே பார்வையற்ற சாங்கை பிடித்துக் கொடுத்தால் இந்தக் கிறிஸ்தவர் களை உயிரோடு விட்டுவிடலாம் என பாக்ஸர்களின் தலைவன் கூறினான். சில நாட்கள் அனைவரும் மௌனமாயிருந்த னர். கிறிஸ்தவர்களின் பாடு அதிகரித்த போது ஒரு பலவீன கிறிஸ்தவன் பார்வை யற்ற சாங்கைத் தேடிச்சென்றான். அங்கு சாங்கிடம் நடந்தவற்றைக் கூறினான். உடனே அந்த பார்வையற்ற ஊழியக் காரன் தன் கரங்களை நீட்டி 'அவர்களுக் காக நான் மரிப்பேன், என்னை அழைத்துச் செல்வது நல்லது' என்றான்.

நீண்ட தூரம் கரடுமுரடான பாதைகளிலும், கொளுத்தும் வெயிலி லும் நடந்து சாயோயாங்ஷான் என்ற இடத்தை அடைந்தனர். உடனடியாக சாங் கைது செய்யப்பட்டு கட்டப்பட்டு யுத்தங்களின் தெய்வமாகிய க்வான்கங் என்ற தொழுகை இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு முரடர்கள் திரளாய்க் கூடிவந்தனர். சாங் இழுத்து வரப்பட்டு அந்த தெய்வங்களை ஆராதிக்கும்படி கட்டளை பிறந்தது. சாங் அமைதலோடும் மரியாதையோடும் "நான் ஒரே ஜீவனுள்ள உண்மையான தேவனை மட்டுமே வணங்குவேன்" என்று பதிலளித்தார். முரடர்கள், "நாங்கள் உன்னைக் கொன்று போடு வோம்" என்றனர். 'அது எனக்குப் பெரிதல்ல, நான் உயிரோடு எழும்பு வேன்' என்று சாங் பதிலளித்தார். "அயல் நாட்டாரைப் பின்பற்றும் இந்தப் பொல்லாப்பிலிருந்து நீ மனந்திரும்ப மாட்டாயா?" என்று முரடர் கத்தினர். "நான் என் பாவங்களை விட்டு மனந்திரும்பினேன்" என்று அமைதியாக சாங் பதிலளித்தார். "புத்தரை நம்புகிறாயா" என்ற கேள்வி வந்தது. "நான் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்" என பதில் வந்தது. தொடர்ந்து மக்களுக்கு சாங் பிரசங்கிக்க ஆரம்பித்து விட்டார்.

ஜூலை 22 1900 அன்று அவரது கைதிற்குப் பிறகு 3-ம் நாள் திறந்த வண்டியில் தெருக்கள் வழியாக திரள்கூட்ட மக்கள் மத்தியில் கல்லறைத் தோட்டத்திற்கு கொண்டு செல்லப் பட்டார். கிறிஸ்தவர்களும் சாட்சியாக பாடல்களைப் பாடியும் ஜெபித்துக் கொண்டும் பின்சென்றனர். சாங் மௌக்டென் மருத்துவமனையில் முதலாவது தேவ செய்தியைக் கேட்ட போது படித்த பாடலை அவர்கள் சத்தமாகப் பாடினர்.

"இயேசு என்னை நேசிக்கிறார்,
அவர் எனக்காக மரித்தார்

பரலோக வாசல் எனக்காகத் திறந்தார்

அவர் என் பாவங்களையெல்லாம் கழுகுவார்

அவரது சிறு பிள்ளையாகிய என்னை ஏற்றுக் கொள்வார்

இயேசு என்னை நேசிக்கிறார்

எப்போதும் என் அருகிலிருக்கிறார்

மரிக்கும்போதும்நான்அவரைநேசித்தால்

அவர் பரத்தில் தம் வீட்டில் சேர்த்துக் கொள்வார்"

தண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்கு வந்தபோது அவர் வண்டி யிலிருந்து இறக்கப்பட்டு முழங்காலில் நிறுத்தப்பட்டார். அப்போது அவர் சத்தமாக, 'பரலோக பிதாவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்' என்று ஜெபிக்க கொலையாளிகளின் வாள் அவரது உயிரைப் பறித்தது.

கொன்றவர்களை பீதி பற்றிக் கொண்டது. சாங் பார்வையற்றவரா யிருந்தபடியால், அவர் ஆவிகளின் பாதுகாப்பை உடையவர் என்று எண்ணினர். மேலும் மறுபடியும் எழும்புவேன் என்ற வார்த்தைகளும் அவர்களைத் திகிலூட்டின. எனவே அவரது உடலை எரித்து மலை ஆறுகளில் இட்டனர். இன்னும் அவர்களுக்கு பயம் தீரவில்லை. 'அவன் ஒரு நல்ல மனிதன், அவன் ஒரு தெய்வமாக மாறிவிடுவான்' என்று கூறி பாக்ஸர்கள் அந்தப் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தாமல் விட்டுவிட்டனர்.

சாங்குடைய சுயநலமற்ற தியாகம் அவன் பிரசங்கித்த செய்தியை விசுவாசிக்கச் செய்தது. இந்த உத்தம பக்தன் எழுதிய பாடலைக் கீழே தருகிறோம். இந்த வரிகளை வாசிக்கும் போது குருடரான சாங் தனிமையும் கடுமையுமான பாதைகளில் கடந்து சென்று சுவிசேஷத்தை அறிவித்தபோது அவரது ஆத்துமாவிற்கு இரட்சகராகிய இயேசு எவ்வளவு நெருக்கமும், விலையேறப் பெற்ற வருமாயிருந்தா ரென்பதை உணர முடியும்.

இயேசு என் வழிகாட்டி
இயேசு என் வழிகாட்டி
அவர் எனது மகிழ்ச்சி
சமாதானம் என் ஆத்துமாவை நிரப்புகிறது
அவர் என் வழிகாட்டி
உழைப்பிலும், இளைப்பிலும், பகலிலும் இரவிலும்
இயேசு எப்போதும் என்னருகிலுண்டு

என் வழிகாட்டி இயேசு,
ஒவ்வொரு நாளும் அவரே
அவரது இரக்கத்தின் கரம் எனது
கரத்தைப் பற்றிக்கொண்டது
அவர் என் வழிகாட்டி, அவரில் நான் வாழ்கிறேன்.
அவரது வலது கரத்தில் நான்
இளைப்பாறுகிறேன்

இயேசுவின் கரத்தை இறுகப் பற்றிக் கொள்கிறேன்
வாழ்வின் பிரயாணத்தில் பரலோக வாசல்மட்டும்
சுகமோ, துக்கமோ என் நம்பிக்கை அசைவதில்லை
இயேசு என் வழிகாட்டி அவருக்காகக் காத்திருப்பேன்

இவ்வாழ்வு முடியும் போது வெற்றியுடன் நிற்பேன்
எதிரிகள் மேலும், பாவ தீமைகள் மேலும்
இயேசு என் வழிகாட்டி, நான் அவரை நம்புகிறேன்
நான் எந்த பயங்கர பிரளயத்திற்கும் பயப்படேன்

அறிவிப்பு

வருகையின் தூதன் பத்திரிகைக்கு சந்தா கிடையாது. வருகையின் தூதன் ஊழியத்தை உதாரத்துவமாய் தாங்குங்கள்

நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரிகளும் மூன்று சிறந்த காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பி, இரண்டு மிஷனெரி ஊழியங்களுக்கு கொடுக்க கேட்டுக்கொண்டார்கள்.

எனக்கு மிகவும் பிரியமான கர்த்தருடைய பிள்ளைகளே, பண்டிகை என்கிற பெயரில் உங்கள் பணங்கள் பிறமதஸ்தரின் கரங்களில் வீணாய் போக வேண்டுமா?

பரலோகத்திற்குப் போக விரும்புகிறவர்கள், "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை."

"உங்கள் பொக்கிஷம் எங்கே யிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" என்றார் **இயேசுகிறிஸ்து** மத்தேயு 6:19-21.

18.11.18 அன்று கோவை சபை ஆராதனையில் "இயேசப்பாவைப் போல் பிரசங்கிப்பது" (Preaching like Jesus) என்ற செய்தியை பிரசங்கிக்க தேவன் எனக்கு இரக்கம் பாராட்டினார்.

"அது முதல் இயேசு : **மனந்திரும்புங்கள்,** பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" மத்.4:17.

எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது என்னவெனில்.....

ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு.

ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, **மனந்திரும்பி,** ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; ..... என்றெழுது வெளி.2:1-7.

ஓ தேவ சபையே, மனந்திரும்பு!

O Church of God, Repent!

ஆசிரியர் கடிதத்தை தொடர்ந்து எனது தகப்பனார் எழுதிய செய்தியை கீழே அச்சிடுகிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,

வெஸ்லி தேவதாசன்

(WESLEY DEVADASON)

ஆசிரியர் : 94980 30295
உதவி : 94897 40295
ஜெப உதவி : 89404 64531
அலுவலகம் : 95432 21008
காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

பெர்கமு சபைக்கு ஆவியானவரின் செய்தி

வெளி.2:12-17-ல் காணும் இச் செய்தியை ஜெபத்தோடு படித்துவிட்டு இக்கட்டுரையைப் படியுங்கள்.

பெர்கமு நகரம்

சிமிர்னாவுக்கு நேர் வடக்காய் 50 மைல் தொலைவில், வட்ட வடிவமாய் உயர்ந்த ஓர் அழகிய பீடபூமியின் மேல் பெர்கமு அலங்காரமாய் அமைக்கப் பட்டிருந்தது. உள்நாட்டு நகரமாகையால் எபேசு, சிமிர்னாபோல் கப்பல் போக்குவரத்துக்கும் வியாபார விருத்திக்கும் வசதியற்றதாயிருந்த போதிலும், மற்றெல்லாக் காரியங்களிலும் லண்டன், பாரீஸ், பெர்லின் போன்ற பிரபல நகரமாய் விளங்கிற்று.

"ராஜரீக நகரம்" என்ற புகழ் நாமம் பெற்ற பெர்கமு ஆசியாவின் தலை நகராகவும் இருந்தது. பிரசித்தி பெற்ற அரசர் பலர் அங்கு தங்கி நாட்டை ஆண்டுவந்தனர். ரோமை அரசரின் பிரதிநிதி ஒருவனும் அங்கிருந்தான். அவனுடைய சின்னம் வாள். எவரையும் பட்டயத்துக்கிரையாக்கும் அதிகாரம் அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த சபைக்கே கர்த்தர் தம்மை "இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை" உடையவராக வெளிப்படுத்துகிறார். ரோமை அதிகாரியின் பட்டயம் சரீரத்தை மாத்திரம் கொலைசெய்யும்; தேவனுடைய பட்டயமோ சரீரத்தையும் ஆத்துமாவையும் நரகத்திலே தள்ளும் மத்.10:28.

பெர்கமு நாகரீகத்தில் மிக முன்னேற்றமடைந்தது. அங்குள்ள சர்வ கலாசாலைகள் கீர்த்தி வாய்ந்தவை. விஞ்ஞானத்திலும் மருத்துவத் துறையிலும் அது முதலிடம் பெற்றது. அங்குள்ள நூல் நிலையத்தில் 2 லட்சம் புத்தகங்கள் உண்டாயிருந்ததாம். பக்குவப்படுத்தப்பட்ட தோலில் கையால் எழுதும் அக்காலத்தில் இத்தனை பெரிய நூல் நிலையம் இருந்தது ஆச்சரியமே. எழுதுவதற்காகத் தோலை முதன் முதலாவதாகப் பயன்படுத்தியது பெர்கமுதான்.

பெர்கமுவிலுள்ள மார்க்கம்

இவ்வுலகத்தின் அதிபதியும் (யோவா .12:31) இப்பிரபஞ்சத்தின் தேவனுமான சாத்தான் (2 கொரி.4:4) தான் ஆதாமிடமிருந்து அபகரித்துக் கொண்ட உலகத்தை ஆளுகை செய்ய பாபிலோன் என்னும் பாபேலையே தலைநகராய்த் தெரிந்துகொண்டதால், அங்கேயே அவனுடைய சிங்காசனம் நிலைநாட்டப்பட்டது. அங்கே பேய் வணக்கத்தையும் விக்கிரகாராதனையையும் ஆரம்பித்தவனும் பரவச்செய்தவனும் நிம்ரோத் என்பவனே. "இவன் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக் காரனாயிருந்தான்" என்றும் (ஆதி.10:9) "பூமியிலே பராக்கிரமசாலியாயிருந்தான்" என்றும் (1 நாளா.1:10) தேவ வசனம் கூறுகிறது. இங்கு "வேட்டைக்காரன்" என்று திருப்பியிருக்கும் பதம் "பட்சிக்கிறவன்" அல்லது "கொடுமையாய்த் துன்புறுத்துகிறவன்" என்று பொருள்படும். "நிம்ரோத்" என்னும் பதத்தின் பொருளே "கலகம்" என்பதுதான்.

இவனைக் குறித்துப் பூர்வ எபிரேய கிரந்தங்கள் "பாவத்தில் கொடியவன், குற்றமற்றவர்களைக் கொலை செய்தவன், தேவனுக்கு எதிரானவன்" என்றும் "யுத்தப்பிரியனான ராட்சதன்" என்றும், அவன் மக்களை சேமுடைய மார்க்கத்தை (யெகோவா வணக்கத்தை) விட்டுத் தன் கட்டளையையே கைக் கொள்ள வற்புறுத்தினான் என்றும் விமர்சிக்கின்றன. ஆதி.10:11,12-ல் "அசூர் புறப்பட்டுப்போய் (கல்தேய நாட்டில்) நினிவேயைக் கட்டினான்" என்றிருப்பது (Margin படி) "அவனே போய் நினிவேயைக் கட்டினான்" என்றிருப்பதே சரியாகும். நிம்ரோத் தன் மாமனான நினுவின் பெயரால் அதைக் கட்டியிருக்கலாம்.

நிம்ரோத்தின் மரணத்துக்கப்பால் அவன் மனைவியான செமிராமிஸ் விக்கிரகாராதனையையும் பேய் வணக்கத்தையும் உலகம் முழுவதிலும் பரப்பிவிட்டாள். இவ்வாறு பாபிலோன் பேய் வணக்கத்தின் தலைமைப்பீடமாய் பல நூற்றாண்டுகளாய் இருந்து வர, கல்தேய பரம்பரையின் கடைசி அரசனும், பாபிலோன் மார்க்கத்தின் பிரதான ஆசாரியனுமான 3-ம் அத்தாலஸ் பெர்ஸிய சேனைக்குப் பயந்து ஓடினபோது அங்குள்ள விக்கிரகங்களைக்கொண்டு சென்று பெர்கமுவை விக்கிரகாராதனைக்கும் பேய் வணக்கத்துக்கும் தலைஸ்தானம் ஆக்கினான். ஆகையால்தான் கர்த்தர் அதை "சாத்தானுடைய சிங்காசனம் இருக்கிற இடம்" என்கிறார் (2:13).

(3-ம் அத்தாலஸ் மரிக்கும்போது தன் அதிகாரங்களனைத்தையும் ரோமாபுரிக்கு அளித்துவிட்டான். ஆகவே கி.மு.133 முதல் சாத்தானின் சிங்காசனம் ரோமாபுரிக்குச் சென்றுவிட்டது. ரோமை அரசர் நாட்டின் தலைவர்களாகவும் பேய் வணக்கத்தின் பிரதான ஆசாரியராகவும் இருந்து வந்தனர்)

பேய் வணக்கத்தின் தலைநகரான பெர்கமு விக்கிரகாராதனையில் எபேசு, சிமிர்னா நகரங்களைக் காட்டிலும் சிறிதும் குறைந்ததல்ல. இங்கு ஏராளமான விக்கிரக ஆலயங்கள் உண்டு. அவற்றில் மிகப் பிரதானமானது எஸ்குலாப்பியஸ் என்னும் சர்ப்ப தேவனுக்குரியதே. அங்கு வளர்க்கப்பட்ட ஒரு பாம்பைத்தான் ஆரோக்கியமளிக்கும் தெய்வமாக வணங்கிவந்தனர். உலகத்தின் பல பாகத்திலிருந்தும் மக்கள் அங்கு செல்வதுண்டு. அதன் வணக்கம் அருவருப்பானது. யூப்பித்தர் தேவனுக்கும், அத்தேனே தேவிக்கும் கட்டப்பட்ட பெரிய ஆலயங்களும் அங்கு உண்டு. ஆகவே பெர்கமு நாட்டின் தலைஸ்தானமாய் மட்டுமல்ல, விக்கிரகாராதனைக்கும் பேய் வணக்கத்துக்கும், அரச வணக்கத்துக்கும், சகல பாவங்களுக்கும் தலைஸ்தானமாயும் விளங்கிற்று. ஆவியாவில் அரச வணக்கம் ஆரம்பித்ததே இங்குதான்.

பெர்கமுவிலுள்ள கிறிஸ்தவ சபை

இதைக் குறித்து கர்த்தர் "உன் கிரியைகளையும் ..... நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும்..... எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும்..... விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் நான் அறிந்திருக்கிறேன்" என்கிறார் 2:13. பெர்கமு கிறிஸ்தவர்களுக்குச் சோதனை மிகுதி. அங்கு தன் சிங்காசனத்தை நிலை நாட்டி ஆண்டு கொண்டிருந்த சாத்தானை வணங்க நெருக்கினர் ஒரு கூட்டத்தார். ரோமைச் சிங்காசனத்திலிருந்த அரசனை வணங்க வற்புறுத்தினர் அரசியல் தலைவர்கள். ஆகவே கிறிஸ்தவர்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் ஒருவனுடைய பெயரைக் கர்த்தர் பொன் எழுத்துக்களில் வரைகிறார். அவனுக்குச் சபையில் பதவியோ, பட்டமோ, சமுதாயத்தில் பேரோ புகழோ இருந்ததில்லை. அவன் ஒரு சாமானிய கிறிஸ்தவன், ஆயினும் தன் ஆண்டவரை உண்மையாய் நேசித்தான். தன் தருணம் வந்தபோது சத்துருக்களுக்கு இணங்க மறுத்தான். அந்திப்பா என்னும் பதத்திற்கு "ஏராளமானவர்களுக்கெதிராய் நின்ற தனி மனிதன்" என்பது பொருள். ஆம், ஏராளமான எதிரிகளை அவன் தனிமையாய் எதிர்த்து, உத்தம கிறிஸ்தவனாய் நின்றான். நித்திய மகிமையை நாடி தன் உயிரை அற்பமாய் மதித்தான். உலக மக்களிடம் உயிர்ப்பிச்சை கேட்டு நித்தியத்தை நரகத்தில் கழிக்க அவன் அத்தனை மதிகேடனல்ல. அதனால் உலோகத்தாலாகிய எருதின் சிலையை பழுக்கக் காய்ச்சி, அந்திப்பாவை அதனுள் புகுத்திக் கொலை செய்தார்களாம். சில நிமிட வேதனை சகித்த அந்திப்பா இன்று மகிமையில் ஜீவ கிரீடம் தரித்தவனாய் ஆனந்தகீதம் பாடி மகிழுகிறான்.

பெர்கமு சபையில் காணப்பட்ட இரு பெருங்குறைகளைக் கர்த்தர் விசனத்தோடு எடுத்துக்காட்டுகிறார். இவற்றிலொன்று "விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறுதலை இஸ்ரவேல் புத்திரர் முன் பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை கொடுத்த பிலேயாமின் உபதேசத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு" என்பதாகும். விசனமான இச்சம்பவம் எண்ணாகமம் 22-25 அதிகாரங்களில் காணப்படுகிறது.

எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் வழியில் தங்களை எதிர்த்த ஜாதிகளையெல்லாம் முறியடித்து முன்னேறி, தன் நாட்டையும் சமீபித்து விட்டனர் என்று கண்ட மோவாபிய அரசனான பாலாக், அவர்களை யுத்தத்தில் மேற்கொள்ள முடியாதென்று கண்டதால், அவர்களை சபிப்பதற்காக பிலேயாம் என்னும் தீர்க்கதரிசியை, ஏராளமான வெகுமதிகளை வாக்குப் பண்ணி வரவழைத்தான். அவன் "அநீதத்தின் கூலியை விரும்பி தேவனுடைய செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்தான்" என்கிறார் ஆவியானவர் 2 பேதுரு 2:15. ஆயினும் அவர்களை அவன் சபிக்க தேவன் இடமளிக்கவில்லை.

அரச வெகுமதியை இழந்துபோக விரும்பாத பிலேயாம் பாலாக்குக்கு ஒரு இரகசியத்தைத் தெரிவித்தான். "அந்த ஜனம் தங்கள் தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவர்களாகையால் புறஜாதிகளோடு கலவாமல் தனித்தே வாழுவார்கள். அவர்களுடைய வெற்றியின் இரகசியம் இதுவே. பிறரோடு கலந்துவிடுவார்களானால் தேவனே அவர்களை சபித்து விடுவார். ஆகையால் உமது பெண்கள் மூலம் அவர்களை வசப்படுத்திக்கொள்ளும்" என்று போதித்தான். பாலாக் தன் எண்ணம் பலித்ததால் களிப்புற்றான். பிலேயாமின் ஆலோசனையைக் கொண்டு நடத்தினான்.

இஸ்ரவேலின் வாலிபர் மோவாபியரின் தேவனான பாகான்பேயோரின் பண்டிகைப் பலிவிருந்துகளுக்கு அழைக்கப்பட்டனர். அங்கே அவர்கள் புசித்து, குடித்து வெறித்திருக்கையில் இச்சை வெறி கொண்ட மோவாபிய அழகிகளின் அரை நிர்வாண நாட்டியங்களில் மதிமறந்தனர். "இஸ்ரவேலர் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணி ..... அவர்கள் தேவர்களைப் பணிந்து கொண்டார்கள்." தேவன் அவர்கள்மேல் கோபங்கொண்டு வாதையை அனுப்பினார். "அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம் பேர்" எண்25:1,2,9. விக்கிரகாராதனை நிறைந்த பெர்கமுவிலிருந்த கிறிஸ்தவர்களும் இதே சோதனைக்கு இடங்கொடுத்தார்கள்.

இரண்டாவது குறை "நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு" என்பதாகும். (2:15) நிக்கொலாயர் என்னும் கிரேக்க பதம் "நிக்கேயோ" (கீழடக்கி ஆளுவது) "லாவோஸ்" (Laity) சபையார், என்னும் இரு பதங்களில் தொடர்பாகும். சபையில் பணிவிடை செய்யவேண்டிய தேவ ஊழியர் தேவனுடைய சபையை ஒரு ஸ்தாபனமாக மாற்றி, அரசாங்கத்தைப் போன்ற ஆளுகை முறையை அதில் புகுத்தி, தாங்கள் சபையாரை ஆளும் தலைவர்களாய் மாறும் தப்பிதத்தையே இது காண்பிக்கிறது. எபேசு இதை வெறுத்தது. (2:6) பெர்கமுவோ அதற்கு இடங்கொடுத்தது. கர்த்தர் "அதை நான் வெறுக்கிறேன். நீ மனந்திரும்பு. இல்லாவிட்டால்.... யுத்தம் பண்ணுவேன்" என்றார் (2:15,16)

இன்று பெர்கமு தன் பூர்வ மகிமையை இழந்து, ஒரு சிறிய பட்டணமாய் பெர்கமோ என்ற பெயரைக்கப்படுகிறது. மரத்தாலாக்கப்பட்ட சிறிய வீடுகளின் மத்தியில் சில பூர்வீக ஆலயங்களும் காணப்படுகின்றன.

தீர்க்கதரிசன முறையில் பெர்கமு கி.பி.313 முதல் 606 வரையுள்ள சபையைக் குறிக்கும். சாத்தான் 250 ஆண்டு காலமாய் துன்புறுத்தியும், டயோக்கிளீஷியன் மூலம் 10 ஆண்டுகள் தொடர்பாய் வாதித்தும், கிறிஸ்துவின் சபை பக்தி வைராக்கியத்திலும் பரிசுத்தத்திலும் விசுவாசத்திலும் வளர்ந்ததேயன்றி அழிந்து போகவில்லை. துன்பத்தின் மூலம் அதை அழிக்க முடியாதென்று கண்ட சத்துரு இன்பத்தின் மூலம் அதைக் கெடுக்கத் திட்டமிட்டான். வெளியே சத்துருக்களை எழுப்பி அபஜெய மடைந்த சாத்தான், உள்ளேயே சத்துருக்களை எழுப்பி சபைத் தலைவர்களைக் கொண்டே சபையைச் சீர்கேடடையச் செய்தான்.

கி.பி.312-ல் கான்ஸ்டன்டைன் ரோமை சாம் ராஜ்யத்தின் அதிகாரத்தைப் பெற்றான். அவன் அதிகாரத்தில் உறுதிப்பட வேண்டுமானால் ஒரு பலத்த எதிரியை மேற்கொள்ள வேண்டிய திருந்தது. அதற்கு முந்தின இரவில் கிறிஸ்து சிலுவையோடு அவனுக்குக் காணப்பட்டதாகவும், "இந்தச் சின்னத்தால் நீ வெற்றியடைவாய்" என்ற வார்த்தைகளை அவன் கேட்டதாகவும், அவ்வாறே வெற்றி பெற்றதால் அவன் கிறிஸ்தவனானதாகவும் சொல்லுகிறார்கள். அது உண்மையாயிருக்கலாம்.

ஆனால் ஒன்று தெளிவாய் விளங்குகிறது. 250 ஆண்டுகளாய் ரோமை அரசு தன் முழு வல்லமையையும் பயன்படுத்தியும் கிறிஸ்து மார்க்கம் வளர்ந்துகொண்டே வருவதன் இரகசியம் என்ன என்பதை அவன் சிந்திக்கத் தொடங்கினான். அதை அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தோடு கிறிஸ்தவர்களுடன் சற்று தொடர்பு கொண்டான். அதன் மூலம் விக்கிரகாராதனைக்காரரான தன்குடிகள் உண்மையற்றவர்களும் நம்பப்படத் தகாதவர்களும் கலக குணமுள்ளவர்களுமாயிருப்பதையும், கிறிஸ்தவர்களோ தீங்கற்றவர்களும், சமாதானப்பிரியரும், முற்றிலும் நம்பப்படத்தக்க உண்மையுள்ளவர்களுமாயிருப்பதையும் கண்டு கொண்டான். ஆகவே பிறரிடம் இல்லாத ஏதோ ஒன்று கிறிஸ்தவர்களிடம் இருக்கிறது என்று கான்ஸ்டன்டைன் உணர்ந்தான். எனவே 313-ல் தன் குடிகள் தங்கள் விருப்பப்படி எந்த தேவனையும் வணங்கிக்கொள்ளலாம் என்று விளம்பரம் செய்தான்.

முந்திய அரசர்கள் சாம்ராஜ்யத்தை இணைத்துக்கட்ட விக்கிரகாராதனையே ஏற்றது என்று நம்பியதால் கிறிஸ்தவர்களை அழிக்கத் துணிந்தனர். இவனோ தன் பரந்த நாட்டில் ஒற்றுமையை உருவாக்க கிறிஸ்தவர்களின் மதமே உதவும் என்று கண்டு கி.பி324-ல் பேய் வணக்கத்திற்கெதிரான சட்டம் ஒன்றை இயற்றியதோடு, தன் நாடு முழுவதிலும் கிறிஸ்து மார்க்கத்தைப் பரப்பத்தக்கதாக உழைக்கவும் துணிந்து விட்டான். ஆயினும் இது வெறும் அரசியல் தந்திரமே. அவன் மதம் மாறியும் மனம் மாறவில்லை. அவன் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டதாகவோ ஞானஸ்நானம் பெற்றதாகவோ எவ்வித ரேகையுமில்லை. (மரணப் படுக்கையில் ஞானஸ்நானம் பெற்றதாக Gibbon என்னும் சரித்திராசிரியன் கூறுகிறான்) மேலும் பேய் வணக்கத்தின் பிரதான ஆசாரியனாகப் பெற்றிருந்த பட்டத்தை சாகுமளவும் அவன் விடவுமில்லை. ஆகவே, அவன் கிறிஸ்து சபைக்கும் பேய் வணக்கத்துக்கும் தலைவனாகவும் இரண்டையும் ஒன்றாய்கட்டி இணைக்கும் ஒரு மனிதனாகவுமே விளங்கினான்.

அரசாங்கத்தால் துன்புறுத்தப்பட்ட சபை இப்போது அரச ஆதரவையே அடைந்துவிட்டது. பாபிலோன் மார்க்கத்தாரின் உயர்ந்த பதவிகளில் கிறிஸ்தவர்கள் அமர்த்தப்பட்டனர். விக்கிரக ஆலயங்கள் கிறிஸ்தவ ஆலயங்களாக மாற்றப்பட்டன. அங்குள்ள ஆசாரியர்களின் அலங்கார ஆடைகள் கிறிஸ்தவ ஊழியருக்கு அளிக்கப்பட்டதோடு அவர்கள் அரசாங்கச் சம்பளமும் பெற ஆரம்பித்தனர். உபத்திரவத்துக்குப் பதிலாக உன்னத பதவிகளும், எளி

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மைக்குப் பதிலாக ஆடம்பர வாழ்க்கை யும், வறுமைக்குப் பதிலாகச் செல்வச் செழிப்பும் ஏற்பட்டன. வீடுகளில் கூடி ஜெபித்தவர்கள் அலங்காரமான ஆலயங் களில் அமர்ந்து ஆராதிக்க ஆரம்பித்தனர்.

அரச தயவை நாடியும், பதவிகள் நிமித்தமாகவும் சிலவேளைகளில் பட்டயத்துக்குப் பயந்தும் மக்கள் ஞானஸ்நானம் பெற்றுக்"கிறிஸ்தவர்கள்" ஆக மாறினர். அறிவாளிகளான விக்கிரகாராதனைக்காரர், பூசாரிகள் முதலியோரிடம் சபைகள் ஒப்படைக்கப் பட்டன. அவர்களுக்கு மார்க்கத்தின் மூலோபதேசங்களே தெரியாது. ஆவி யோடு ஆராதிப்பதற்குப் பதிலாக மனதைக் கவரத்தக்க ஆராதனை ஒழுங்கு கள் அமைக்கப்பட்டன. பாபிலோன் மார்க்கத்தின் முறைகளும் சடங்குகளும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டி சபைகளுக்குள் புகுத்தப் பட்டன.

ரோமாபுரியில் அலங்காரமான ஓர் ஆலயத்தில் சிறந்த சலவைக் கற்களால் அமைக்கப்பட்டு பொன்னாலும் விலை யேறப்பெற்ற கற்களாலும் அலங்கரிக்கப் பட்ட மேடைமேல் அரசன் அமருவதற் காக சிறந்த சிங்காசனமொன்றும், அதன் முன்னால் சற்று தாழ்வாக ரோமாபுரி அத்தியட்சர் அமருவதற்காக இன் னொரு அழகிய சிங்காசனமும் அமைக்கப்பட்டன.

இவ்வாறாய் வழி தப்பிப்போன சபையில் பிலேயாமின் போதகமும் நிக்கோலாயரின் உபதேசமும் நுழைந்தது அதிசயமல்ல. பிரிந்து வாழவேண்டிய தேவஜனம் மோவாபியரோடு **கலந்துறவாடி** தேவ கோபத்தால் அழிய வழி வகுத்ததே பிலேயாமின் போதனை. இக்காலத்தில் (313-606) சபைக்கு ஏற் பட்ட ஆபத்தும் இதுவே. சபை (எக்ளீஸியா) என்னும் கிரேக்க பதத்தின் கருத்து "வெளியே அழைக்கப்பட்ட வர்கள்" என்பதே. நமதாண்டவர் தமது சீஷரைப் பார்த்து "நீங்கள் உலகத் தாராயிருந்தால் உலகம் தன்னு டையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து (பிரித் தெடுத்து) தெரிந்து கொண்டபடியி னாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது" என்றார் யோவா 15:19.

"உலகத்திலும் உலகத்திலுள்ள வைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என்பது கிறிஸ்தவனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் கண்டிப்பான கட்டளை யாகும். 1 யோவான் 2:15 ஆகையால்தான் பூர்வ விசுவாசிகள் "பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர் களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை" எபி.11:16, 37, 38.

பெர்கமு காலக் கிறிஸ்தவர் களோ "ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கிய மேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசு வாசிக்கு பங்கேது? தேவனுடைய ஆலயங்களுக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?" என்பதை உணரவே யில்லை 2 கொரி.6:14-7:1. "நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது" என்பதை (பிலி.3:20) மறந்து, உலகத்தையே தங்கள் நித்திய குடியிருப்பு என்று எண்ணி, உலக மக்களோடு மிஞ்சிய உறவு கொண்டனர். கிறிஸ்து வோடு உன்னதங்களில் உட்கார வேண்டிய சபை (எபே.2:7) உலகத்தி லேயே படுத்துக்கொண்டது.

பெர்கமு என்னும் பதம் "மணம் முடித்தவள்" என்னும் பொருள்படும். மகிமையின் மணவாளன் வந்தழைத்துச் சென்று மத்திய வானில் வைத்து மணம் முடித்துக்கொள்ளும் மகத்துவ நாள் மட்டும் மாசற்ற கன்னிகையாகத் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய சபை (2 கொரி.11:2) அழகும் புகழும் செல்வமும் செல்வாக்கும் சீரும் சிறப்பு முடையதாய்த் தோன்றிய ரோமை அரசாங்கம் என்னும் மணவாளனுக்குத் தன்னைக் கையளித்துவிட்டதால் கிறிஸ்துவுக்கு துரோகம் செய்து வேசியாகிவிட்டது. இந்த சபைக்கு கான்ஸ்டன்டைன் அரசன் தேசிய சபை அல்லது சர்வலோக சபை என்ற கருத்துள்ள "கத்தோலிக்க சபை" என்ற பெயரைச் சூட்டினான்.

இக்காலத்தில் கிறிஸ்துவின் சபை ஆதி அப்போஸ்தல காலத்தை முற்றிலு மாய் மறந்து, பாபிலோன் மதத்திலுள்ள சகல சடங்காச்சாரங்களையும் கடன் வாங்கி, சற்று மாற்றியமைத்து தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டது. முதன் முதலாவதாக 320-ல் ஆலயத்தில் மெழுகுவர்த்தி வைக்கும் வழக்கம் நுழைந்தது. அதைத் தொடர்ந்து ஏராளமான சடங்குகள் ஒவ்வொன்றாய் நுழையவே, கிறிஸ்து சபைக்கும் விக்கிரகாராதனைக்கும் வித்தியாசம் தெரியாமலாகிவிட்டது.

பற்பல பண்டிகைகளைக் கொண்டாடி, புசித்து, குடித்து வெறித்து பாடி ஆடி களித்த ரோமர், கிறிஸ்த வர்களுக்குப் பண்டிகைகளே இல்லாத தால் சோர்படைந்தனர். அவர்களைத் திருப்திப்படுத்த பண்டிகை நாட்களை ஏற்படுத்தும் பிரச்சினை ஏற்பட்டது. சூரியன் தெற்கே சென்று மறைந்து, பின்பு வடக்கே திரும்பும் நாளாகிய டிசம்பர் 25-ம் தேதியை பாபிலோன் மதத்தவர் சூரிய தேவனின் பிறந்த நாளாய்க் கொண்டாடி வந்தனர். அந்நாளே கிறிஸ்து பிறப்பு பண்டிகைத் தினமாய் மாற்றப்பட்டது. (குளிர் கால மான டிசம்பரில் பாலஸ்தீன மேய்ப்பர் தங்கள் மந்தைகளை வயல் வெளிகளில் தங்கவைப்பதில்லை. ஆகவே இயேசு டிசம்பரில் பிறக்கவேயில்லை என்று வேதசாஸ்திரிகள் சாதிக்கின்றனர்)

இன்றும், டிசம்பர் 25-ம் தேதியைத் தங்கள் ஆண்டவரின் பிறந்த தினமாக பயபக்தியுடன் கொண்டாடு கின்றனர் பலர். ஆனால் உண்மை எது? வருடத்தின் சகல நாட்களிலும் அந்த நாளைப்போல் கூடுதல் மதுபானம் செலவாகும் நாள் வேறு எது? அந்த நாளைப்போல் கூடுதல் ஆடு, மாடு, பன்றி, கோழி கொல்லப்படும் நாள் வேறு எது? அந்த நாளைப்போல் கிறிஸ்தவர் கள் (ஆடைகளுக்காக) கடன்படும் நாள் வேறு எது? பெர்கமு காலக் கிறிஸ்தவத்தின் பலன் இவை!

பாபிலோனிய மதத்தில் செமிராமிஸ் "தேவ மாதா", "பரலோக மாதா", "வானராக்கினி", "நித்திய கன்னிகை" என்னும் நாமங்களால் வணங்கப்பட்டாள். கிறிஸ்து சபையும் இயேசுவின் தாயை அதே நாமங்களால் வணங்கி, மரியாள் பெயராலும் பண்டிகை நாட்களை ஏற்படுத்திற்று.

செமிராமிஸ் சில இடங்களில் அஸ்ற்றாட்டி என்றும் அஸ்தரோத் என்றும் இஸ்டார் என்றும் அழைக்கப் படுவதுண்டு. அவள் பெயரால் மார்ச் மாதத்தை அடுத்து ஆறுவார நோன்பும் அதைத் தொடர்ந்து ஒரு பண்டிகை விருந்தும் பாபிலோனியருக்கு உண்டா யிருந்தது. அதை ஒட்டியே கிறிஸ்து சபையில் தபசு நாட்களும் உயிர்த் தெழுந்த பண்டிகையும் ஏற்படுத்தப் பட்டன. ஈஸ்டர் என்பது இஸ்டார் என்னும் அஸ்தரோத் தேவியின் பெயரின் மருபேயன்றி வேறல்ல.

பெர்கமு கால சபையில் நிக்கொலாயரின் உபதேசமும் அதிக தீமையை உண்டு பண்ணிவிட்டது. சபை ஊழியர் அரச ஆதரவையும் அரசாங்க சம்பளத்தையும் பெற்று செல்வாக் கடைந்து, சபைகளை ஆளுகைசெய்யும் தலைவர்களாய் மாறிவிடவே, சபைகளுக் குள் ஒரு அரசியல் சூழ்நிலை உருவாகி விட்டது. சங்கங்களும் சட்டதிட்டங் களும் அதிகாரங்களும் ஆளுகைகளும் ஏற்பட்டன. சபை ஆவியானவரால் ஆளப்படுவதற்குப் பதிலாக சட்டங் களால் ஆளப்படும் ஒரு ஸ்தாபனமாக மாறிற்று.

அதோடு பட்டம் பெற்றவர்கள், பட்டம் பெறாதவர்கள் என்கிற ஒரு பெரிய பிரிவினையும் இக்காலத்தில் ஏற்பட்டதே. தற்காலத்தைப்போல் வேதபுத்தகங்கள் இல்லாத அக்காலத்தில், சபையின் மக்களும் பட்டம் பெற்றவர் களுக்கு மட்டும்தான் தெய்வீக அறிவோ அனுபவமோ அதிகாரமோ உண்டு என்று நம்பி அஞ்சி அடிபணிந்தார்.

நமதாண்டவர் "பூமியிலே ஒரு வனையும் உங்கள் பிதா என்று சொல்லா திருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒரு வரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப் படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" என்று திட்டவட்டமாய் கட்டளை கொடுத் திருந்தும் (மத்.23:9,10) தேவ ஊழியர் தங்களைப் "பிதாக்கள்" என்றும் "குருக்கள்" என்றும் அழைக்கத் தலைப் பட்டார்கள், தங்கள் ஆண்டவரின் கட்டளையைத் தாங்கள் மீறுவதாக அவர்கள் உணரவேயில்லை.

வேதபுத்தகத்தில் ஒரே ஒரு இடத்தில் தேவனை பற்றி "அவருடைய நாமம் பரிசுத்தமும் **பயங்கரமானது**" (Holy and REVEREND is His name)என்று எழுதப்பட்டிருக்கிறது சங்.111:9. இந்தப் போதகர்கள் இதே அடை மொழியை

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

(Rev.) தங்கள் பட்டப்பெய ராய்த் தரித்துக் கொண்டனர். சிலரோ இதுவும் போதாதென்று தங்களுக்கு "மகா பயங்கரமானவர்" என்னும் பட்டத்தையும் சூட்டிக் கொண்டனர். இவ்வாறாகத் தங்களை தேவனுக்குச் சமமானவர்களாகவும், தேவனைக் காட்டிலும் பெரியவர்களாகவும் பாவித்துக் கொண்டனர். சிலர் "ஆண்டவர்" என்றே அழைக்கப்பட்டனர். தேவனுக்குச் சமமானவர்களாய்க் கருதப்பட்ட இவர்களுக்குச் சபையார் அடிபணிந்தது. அதிசயமல்ல; ஆனால் சபையின் தலைவரான கர்த்தரோ கோபமடைந்து "நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் வந்து என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்" என்றார் 2:16.

இக்காலத்தைக் குறித்த உவமை மத்.13:31,32-ல் காணப்படுகிறது. "பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்து தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறியதாயிருந்தாலும் வளரும்போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி ஆகாயத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்."

இங்கு "பரலோகராஜ்யம்" என்னும் பதம் "வெளிப்படையான கிறிஸ்தவம்" என்னும் கருத்துடையது. இந்த விதை (அடைக்கப்பட்ட) தோட்டத்தில் (உன்.4:12) போடப்படுவதற்குப் பதிலாய் "நிலத்தில்" போடப்பட்டது. நிலம் உலகம் 13:38. மேலும் கடுகு ஒரு சாதாரண செடி; அது ஆகாயத்துப் பறவைகள் வந்தடையத்தக்க ஒரு பெரிய மரமாவதென்றால் அது இயற்கைக்கு மாறானதே. இது கான்ஸ்டன்டைன் காலத்தில் சபைக்கு ஏற்பட்ட அசாதாரண வளர்ச்சியைத் தான் காண்பிக்கிறது. சபை ஆவிக்குரிய தாயிருந்தும், உலகத்தில் அமர்ந்து, உலகத்தில் வேரூன்றி, உலகத்தைப் பற்றிப் பிடித்து, உலகத்தின் பெலத்தால் நிலை நின்று, உலகத்தில் ஜீவனை உறிஞ்சி அசாதாரண வளர்ச்சியை அடைந்து விட்டது.

இங்கு "பறவைகள்" சாத்தானின் சேனையைத் தான் குறிக்கும் 13:4,19 பார்க்க. அவை சுயநலத்தோடு மட்டுமே நிழலுக்காகவும், கனிகளுக்காகவும் மரத்தில் வந்தடையும். அரசதயவையும் உத்தியோகத்தையும் எதிர்பார்த்து, விக்கிரகாராதனைக்காரரான ஏராளம் மக்கள் இக்காலத்தில் சபையில் அடைக்கலம் புகுந்தனர். இப்பறவைகளால் மரம் அசுத்தமடைவதுபோல, இந்தப் பேர்க் கிறிஸ்தவர்களால் சபை முற்றிலும் கறைப்பட்டு சீர்கெட்டு விட்டது. அந்த நிலைமை இன்றுவரையிலும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டு கிறிஸ்தவ சபையே, உன் உண்மை நிலையை நீ சரியாய் அறிந்து கொள்வாயானால் நலமாயிருக்கும். நீ, திசை தவறியதை அறியாமல் மறைந்திருக்கும் பாறைக்கு நேராய்த் தீவிரிக்கும் கப்பல் போலிருக்கிறாயே! உனக்குள்ளிருக்கும் கோடிக்கணக்கான மக்கள் அக்கரை சேரலாம் என்று நம்பிக்கொண்டே நடுக்கடலில் மடியப் போகின்றனரே! நீ நான்காம் நூற்றாண்டிலேயே திசை தப்பிவிட்டாய். உன்னை நம்பியிருக்கும் மக்களின் ஆத்துமாக்களைக் குறித்த உன் உத்தர வாதத்தை உணருகிறாயா? "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்கும் மக்களுக்குப் பேதுரு அப்போஸ்தலன் கொடுத்த ஆலோசனையைத் தெளிவாய் விளக்கிக் கொடுக்கிறாயா? அப்.2:33-40. "அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" யாக்.3:1.

சபையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவனே, உன் சபைப் பக்தி உன்னைப் பரலோகம் கொண்டு சேர்க்கும் என்று எண்ணிக் கொண்டிருந்து ஏமாந்து போகாதே; உன் சபை விழுந்து போனது. பிசாசோடும் உலகத்தோடும் உறவுகொண்டு புறக்கணிக்கப்பட்டது. அதன் உபதேசங்கள் பாபிலோன் உபதேசத்தின் கலவை; களங்கமற்ற தேவ வசனத்துக்கொத்தவையல்ல. உன் ஆண்டவரின் ஆசீர்வாதம் "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு"- தனி மனிதருக்கே வாக்களிக்கப்பட்டிருக்கிறது. உன் வாழ்க்கையில் வெற்றி உண்டா? தினந்தோறும் பிசாசு, மாம்சம், லோகத்தின் மேல் ஜெயங்கொள்ளுகிறாயா? 2:17.

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு இரண்டு ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப் படுகின்றன. ஒன்று "மறைவான மன்னா". "நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே" என்றவர்களிடம் இயேசு "என் பிதா வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார்..... ஜீவ அப்பம் நானே என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்" என்றார் யோவா.6:31-35. இந்த இயேசுவை உலகம் அறியவில்லை; ஆகவே அவர் உலகத்துக்கு மறைவான மன்னா. இந்த இயேசு உன் ஜீவனாய் உனக்குள்ளே வசிக்கிறாரா? "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்றும், "நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்றும் நீ சொல்லக்கூடுமா? பிலி.1:21; கலா.2:20.

இரண்டாவது ஆசீர்வாதம் வெண்மையான குறிக்கல்லும், அதில் எழுதப்பட்ட புதிய நாமமுமாகும். பரீட்சையில் வெள்ளைக்கல் வெற்றியையும் கறுத்தக்கல் தோல்வியையும் காண்பிக்கும். குற்றவாளிக்கு வெள்ளைக்கல் விடுதலைக்கும் கறுத்தக்கல் ஆக்கினைக்கும் அடையாளமாகும். ஒரு வெள்ளைக் கல்லை இரண்டாய் உடைத்து ஒரு பகுதியில் தன் பெயரை எழுதிக் கொடுத்தால் அதன் கருத்து "நானும் நீயும் ஒன்று, உன் எந்த ஆபத்திலும் நான் உனக்கு உதவி செய்வேன்" என்பதே.

கிறிஸ்தவ வெற்றி என்னும் ஒன்றையே இலக்காய்க் கொண்டு, கொடிய துன்பங்களையும் தொல்லைகளையும் பொறுமையாய்ச் சகித்துக் கொண்டு முன்செல்லும் கர்த்தருடைய பிள்ளையே, உன் ஆண்டவர் உன்னைப் பார்த்து "பயப்படாதே, **நான்** உன்னோடிருக்கிறேன்" என்கிறார். இது உனக்குப் போதாதா?

பத்திரிகை செய்திகள்

❖ இந்தோனேசியாவின் லயன் ஏர் நிறுவனத்தின் விமானம், கடந்த மாதம் 29-ம் தேதி அந்த நாட்டின் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து, பங்கல் பினாங் நகருக்கு புறப்பட்டு சென்றபோது கடலில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த 189 பேரும் கூண்டோடு பலியாகினர். அந்த விமானத்தின் கருப்பு பெட்டி மீட்கப்பட்டு ஆராயப்பட்டது. அதில், அந்த விமானத்தின் தானியங்கி பாதுகாப்பு அமைப்பு விமானத்தின் மூக்கு பகுதியை மீண்டும் மீண்டும் கீழே தள்ளியதும், விமானத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர விமானிகள் போராடி தோற்றதும் அம்பலத்துக்கு வந்துள்ளது.

❖ மெக்சிகோ நாட்டின் அதிபராக ஆண்ட்ரெஸ் மேனுவல் லோபெஸ் ஓப்ரடார் டிசம்பர் மாதம் பதவி ஏற்கிறார். இந்த விழாவில் அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் கலந்துகொள்வார் என வாஷிங்டன் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

❖ ஜப்பானில் ஆவோமோரி மாகாணத்தில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.9 புள்ளிகளாக பதிவானது. உள்ளூர் நேரப்படி காலை 11.23 மணிக்கு ஏற்பட்ட இந்த நில நடுக்கத்தால் கட்டிடங்கள் குலுங்கின. பொதுமக்கள் வீடுகளை இன்ன பிற கட்டிடங்களை விட்டு வெளியேறி திறந்த மைதானங்களில், வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To